சட்டமன்றத்தில் வெறும் பாட்டுக்கச்சேரிதான் நடக்கிறது!

தாராபுரத்தில் உதயநிதி ஸ்டாலின் பரப்புரை.... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஃபோனில் போதைப் பவுடர். இதுவரைக்கும் நட வடிக்கை எடுக்கவில்லை, கேட்டால் தலைவலி மாத்திரை என்றார். திருட்டு வி.சி.டி. அமைச்சர். எல்லாருமே திருட்டு வி.சி.டி. விற்றவர்கள்தான். கடைசியாக, `திருட்டு லாட்டரி அமைச்சர்'. இது தான் தமிழ்நாட்டினுடைய அமைச்சரவைப் பட்டியல்.

இவர்கள்தான் ஆட்சி அமைத்து, ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். கேட்டால் என்ன தெரியுமா கூறுவார்? `கெரியரின் உச்சத்தில் இருந்து வந்தேன்'. எப்போது கேட்டாலும், `கெரியரையே விட்டுவிட்டு வந்துவிட்டேன்' என்று கூறி விட்டு இன்று தாராபுரத்தில் வாக்காளர்கள் ஒவ்வொருவருக்கும் `டிபன் கேரியர்' கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்! பணத்தை வைத்து டிபன் கேரியர் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய முதலமைச்சர் என்ன தெரியுமா சொல்கிறார்.

"நாங்கள் எல்லாம் தூய்மையான ஆட்சி அமைத்திருக்கிறோம்". இது தூய்மையான ஆட்சி கிடையாது, துப்பினால் துடைத்துக் கொள்கின்ற ஆட்சி! அதைச் சொன்னது யார் என்று தெரியும் அல்லவா உங்களுக்கு? இப்போது அவர் அங்குதான் இருக்கிறார். நம்மோடு கொஞ்ச நாள் சுற்றிக்கொண்டு இருந்தார், இப்போது அங்குப் போய்விட்டார். ஏன் நான் சொல்கிறேன்?

இது தூய்மையான ஆட்சி கிடையாது, காறி உமிழ்ந்தால் துடைத்துக் கொள்கின்ற ஆட்சி என்று ஏன் சொல்கிறேன் தெரியுமா? ஆட்சி அமைந்த உடனே அவருடைய ஜோதிடர் ஒருவர் இருக்கிறார். அந்த ஜோதிடரை அரசு ஆலோசகராக வைத்துக்கொண்டார். எல்லாரும் காறி துப்பினார்கள், எதிர்க்கட்சிகள் எல்லாம் கேள்வி கேட்டார்கள், மக்கள் காறி துப்பியவுடன் அதை ரத்து செய்துவிட்டார்.

துடைத்துக் கொள்கின்ற ஆட்சி!

அடுத்து இப்போது, `பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் கட்டுவேன்' என்று சொன்னார், நான் ஏற்கனவே சொன்னேன் அல்லவா பீச் வியூ. அதை மக்கள் இப்போது காறி உமிழ்ந்தவுடனே அதையும், ``இல்லை, நான் யோசித்துச் சொல்கிறேன்" என்று கூறிவிட்டார்.

நேற்று பார்த்தீர்கள் என்றால் மாநில நெடுஞ் சாலைகளிலெல்லாம் இந்தியில் எழுத ஆரம்பித்தார். மக்கள் எல்லாம் காறி இப்போது துப்பியவுடன், அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டார்.

`சட்டம்ஒழுங்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் வராது' என்று நடுவில் ஓர் அரசாணை வெளியிட்டார்கள். மக்கள் அனைவரும் காறி துப்பியவுடன் இன்று அதையும் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். அதனால்தான் சொல்கிறேன், திரும்பத் திரும்பச் சொல்கிறேன், இது தூய ஆட்சி கிடையாது; காறி துப்பினால் துடைத்துக் கொள்கின்ற ஆட்சி.

இந்த ஆட்சிக்கு இன்னொரு முக்கியமான விஷயம். நான் இந்த முதலமைச்சருக்கு வைத்திருக்கிற செல்லப்பெயர் உங்களுக்குத் தெரியும். நம்பர் ஒன் ஓடுகாலி முதலமைச்சர். எதற்கும் பதில் சொல்லத் துப்பில்லை. சட்டமன்றத்தில் காவல்துறை மானியக் கோரிக்கையில் நான் பேசினேன், 40 நிமிடங்கள் பேசினேன், 18 கேள்விகள் கேட்டேன். கடந்த ஐந்து மாதங்களில் 500 படுகொலைகள் நடந்திருக்கின்றன. கடந்த ஐந்து மாதங்களில் கிட்டத்தட்ட 400 பாலியல் வன்கொடுமைகள் நடந்திருக்கின்றன. ஐந்து மாதங்களில் போதைப் பொருள் பழக்கம் எவ்வளவு உயர்ந்திருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்கள் மேல் புகார் வந்திருக்கிறது, பாலியல் வன்கொடுமை, ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் சரவணன் அவருடைய பெயர், அவர் மேல் ஒரு பெண் புகார் கொடுத்திருக்கிறார், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எப்போது நடவடிக்கை எடுப்பீர்கள் என்று 18 கேள்விகள் கேட்டேன்.

அவர் ஓடிப்போய்விட்டார்!

வேகமாக முதலமைச்சர் எழுந்தார். நான் என்ன சொன்னேன் என்றால், மூன்று நாட்கள் கால அவகாசம் இருக்கிறது, நான் பேசியது வியாழக்கிழமை, மூன்று நாட்கள் விடுமுறை. முதலமைச்சர் மூன்று நாட்கள் சென்று ஆயத்தமாகிவிட்டு வாருங்கள், அரசு அதிகாரிகள் இருக்கிறார்கள் அவர்களிடம் கேளுங்கள் என்றவுடனே சபாநாயகர் உள்ளே வந்துவிட்டார். என்ன செய்தார்? "எதிர்க்கட்சித் தலைவர் இப்படி எல்லாம் பேசக்கூடாது, எங்கள் முதலமைச்சர் எப்போதுமே ஆயத்தமாகத்தான் இருப்பார்" என்றார்.

நான் கூறினேன், ``அப்படியா, ஆயத்தமாக இருக்கிறாரா, இப்போதே பதில் சொல்லச் சொல்லுங்கள், நான் உட்கார்ந்து கேட்கிறேன்" என்றேன். பயந்துவிட்டார். பயந்துவிட்டு, ``என்னடா இப்படி மாட்டி விடுகிறார்களே" என்று சொல்லிவிட்டு எழுந்தார் முதலமைச்சர். நான் கூட ``சரி, ஏதோ பேசப் போகிறார்" என்று நினைத்து உட்கார்ந்தேன். உட்கார்ந்து மேலே பார்க்கிறேன், ஆளைக் காணோம். உட்கார்ந்து கொண்டு எதிரே பார்க்கிறேன், காணோம்! ``நான் திங்கட்கிழமை வந்து பதில் சொல்கிறேன், யாரும் ஓடிவிடாதீர்கள்" என்று கூறி அவர் ஓடிப்போய்விட்டார்.

நடுவில் சேலத்திற்குச் சென்றார், உங்களுக்குத் தெரியும். சேலத்திற்குச் சென்று நம்முடைய மேட்டூர் அணையைத் திறந்து விட்டார். திறந்து விட்டுவிட்டு என்ன செய்தார், அங்குப் போகின்ற வழியில் ஒரு பாட்டி இருந்தார். அந்தப் பாட்டிக்குக் கண்ணாடி மாட்டி விட்டார்., அது அப்படியே இருக்கட்டும்.

இப்போது முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் நம்முடைய தலைவர் கொண்டு வந்த திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரைக்கும் அனைத்துக் குழந்தை களுக்கும் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் கொண்டு வந்தார். அந்தத் திட்டத்தை இவர்கள் பெயரை மாற்றிவிட்டார்கள், விரிவாக்கம் செய்திருக்கிறார்கள், ஐந்தாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு என்று ஆக்கிவிட்டார்கள். அந்தத் திட்டத்தினுடைய துவக்க விழாவிற்கு முதலமைச்சர் செல்கிறார். ஒரு குழந்தையோடு உட்கார்ந்து சாப்பிடுகிறார், அந்தக் குழந்தைக்குச் சாப்பாடு ஊட்டிவிட்டார். அங்குப் பாட்டிக்குக் கண்ணாடி மாட்டி விட்டார், இங்குப் குழ ந்தைக்குச் சாப்பாடு ஊட்டி விட்டார். இப்போது அந்தப் பாட்டியும் பேட்டி கொடுத்துவிட்டார், இந்தக் குழந்தையும் பேட்டி கொடுத்துவிட்டது. பாட்டி 10 பேட்டி கொடுத்துவிட்டார், குழந்தை ஒரு 10 பேட்டி கொடுத்துவிட்டது. ஆனால், முதலமைச்சர் இப்போது வரைக்கும் பத்திரிகையாளர்களைப் பார்த்தால் ஓடிப்போய்விடுகிறார். முதலமைச்சர் இப்போது வரைக்கும் ஒரு பேட்டி கூட கொடுத்தது இல்லை. அதனால்தான் சொல்கிறேன், நம்பர் ஒன் ஓடுகாலி முதலமைச்சர்.

பாடம் புகட்ட வேண்டும்!

சீப் மினிஸ்டர் இல்லை, சீட்டிங் மினிஸ்டர். நம்பர் ஒன் சீட்டிங் மினிஸ்டருக்கு இந்தத் தேர்தலில் ஒரு சரியான பாடத்தைப் புகட்ட வேண்டும் என்றால், தாராபுரத்தில் மீண்டும் உதயசூரியன் வெற்றி பெற்றுவிட்டது என்ற செய்தி ஏஆம் தேதி வர வேண்டும். அதை நீங்கள் செய்து காட்ட வேண்டும்.

இங்கு இருக்கக்கூடிய கழகத் தோழர்கள் நீங்கள் அத்தனை பேரும் முடிவு செய்துவிட்டீர்கள். வந்திருக்கக்கூடிய தாய்மார்கள், இந்தப் பகுதி வாக்காளப் பெருமக்களிடத்தில் நான் கேட்டுக் கொள்வது, வைக்கும் ஒரே வேண்டுகோள்: அடுத்து இரண்டு நாட்கள் இருக்கின்றன, 6ஆம் தேதி தேர்தல். நீங்கள் ஒவ்வொருவரும் பிரச்சாரம் செய்யுங்கள். 6ஆம் தேதி வாக்குச்சாவடிக்குச் சென்றீர்கள் என்றால், வாக்குப்பெட்டியில் மூன்றாவது இடம் சகோதரி சுகன்யாவின் பெயர் இருக்கும், பக்கத்தில் உதயசூரியன் சின்னம் இருக்கும். 6ஆம் தேதி மூன்றாவது இடத்தில் இருக்கும் பெயர், வாக்கு எண்ணிக்கையான ஏஆம் தேதி முதல் இடத்தில் வந்து உதயசூரியன் வெற்றி பெற்றுவிட்டது என்ற செய்தி வந்தாக வேண்டும்.

செய்து காட்ட வேண்டும் என்று உங்கள் எல்லோரையும் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன். உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், தலைவருடைய மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகப் பூரிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், டாக்டர் கலைஞருடைய பேரனாக இருந்து உதயசூரியன் சின்னத்தில் சுகன்யாவிற்கு வாக்களியுங்கள். உங்கள் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

பங்கேற்றவர்கள்

கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு , கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஜ.பெரியசாமி, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், வெள்ளக்கோயில் சாமிநாதன், மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் , முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி , முன்னாள் அமைச்சர் சகோதரி கயல்விழி செல்வராஜ் , நாடாளுமன்ற உறுப்பினர்கள் தர்மபுரி மணி, ஈரோடு பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் வஹாப், சீனிவாசன், ஜெயக்குமார், மாவட்டக் கழகச் செயலாளர்கள் காடுவெட்டி தியாகராஜன், வைரமணி, மேயர் அன்பழகன், வடக்கு மாவட்ட மாநகரப் பொறுப்பாளர் தங்கராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர் தனசேகர், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் கே.ஆர். முத்துக்குமார், ஒன்றியச் செயலாளர்கள் எஸ். ஆர்.எஸ்.செல்வம், கே.கே.சிவானந்தன், நகர மன்றத் தலைவர் பாப்பு கண்ணு, மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர் இன்பா ரகு, ஆனந்தகுமார், தாராபுரம் நகரக் கழகச் செயலாளர் முருகானந்தம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் யுவராஜ், மதியழகன், வில்சன் மணித்துரை, ஜெகனாதன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்கள் அருண்சுந்தர், கருப்பசாமி கோட்டையப்பன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் குகன் மற்றும் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.

விலகும் மாயை

தன்னிடம் கை குலுக்க வந்த
இளைஞரை அன்று தனது
பாதுகாவலர்களை விட்டு
அடித்து கீழே தூக்கி எறிந்தவர்
தான்

மக்களிடம் மாயை விலகத்
தொடங்கி விட்டது என்பது
தானே இதன் பொருள்...

என்னநாஞ் சொல்றது

இன்று தெருத்தெருவாக
அலைகிறார்
"வாங்க டீ குடிக்கலாம்"
என்கிற அளவுக்கு
இறங்கியிருக்கிறார் என்றால்



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(04.10.2026)



1. சென்னை கோயம்பேட்டில் முன்விரோதம் காரணமாக ஒன்பது வயது சிறுவன் கழுத்தை நெரித்துக் கொலை ...

2. மதுரை அடுத்த திருமங்கலம் பாரபத்தி கிராமத்தில் பெரியவர்களுக்குள் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக நான்கு வயது சிறுவன் கழுத்தை அறுத்துக் கொலை.

3. சென்னை குன்றத்தூர் அருகே பிரிந்து சென்ற மனைவியை அழைக்கச் சென்ற கணவரை நண்பர்களுடன் சேர்ந்து வெட்டிக் கொன்ற மைத்துனர்.



4. சென்னை திருத்தணி பெரியார் நகரில் காதலை ஏற்க மறுத்ததால் ஆத்திரம், சிறுமியின் தந்தை வெட்டிக்கொலை, நான்கு பேர் கொண்ட கும்பல் வெறிச்செயல்.

5. மதுரை மாவட்டம் செக்கானூரணி அருகே அய்யம்பட்டி கிராமத்தில் லாரி டிரைவர் கத்தியால் குத்தி படுகொலை.

6. சேலத்தில் த.வெ.க. இளைஞரணி நிர்வாகி பிறந்தநாளுக்காக வைக்கப்பட்ட பேனர் சரிந்து , ஏற்பட்ட இடையூறால் வாகனங்கள் நேருக்கு நேர் மோதி பெண் பலி.



7. சென்னையில் நள்ளிரவில் தொடரும் பைக் ரேஸ், ஐ.ஐ.டி. மேம்பாலத்தில் இருந்து கீழே விழுந்து வாலிபர் பலி - வேடிக்கை பார்க்கும் போலீசார்.

8. சென்னை ஏழுகிணறு, கொண்டித்தோப்பு அருகே பிறந்து பத்து நாட்களே ஆன பெண் குழந்தை சடலமாக குப்பைத்தொட்டியில் மீட்பு.

9. சென்னை கொடுங்கையூர் எம்.கே.பி. நகரில் அதிகாலை ரோந்து சென்ற காவல் உதவி ஆய்வாளரை சரமாரியாக அடித்து உதைத்த போதை கும்பல்.



10. சென்னை அம்பத்தூர் ஓரகடத்தில் சாலையில் நடந்து சென்று 9 வயது சிறுமியிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்ட 60 வயது முதியவர் சிக்கினார்.

11. சென்னையை அடுத்த பாடியில் துணி வாங்க கடைக்கு வந்த சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த கடை ஊழியர் சிக்கினார்.



12. சென்னை அடையாறு, திருவல்லிக்கேணி, ஆதம்பாக்கம், வியாசர்பாடி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தொடரும் செல்போன் பறிப்பு, இருசக்கர வாகன ஆசாமிகள் அட்டூழியம், பொதுமக்கள் பீதி.

13. சென்னை படப்பை அருகே மாடம்பாக்கத்தில் வீட்டில் தனியாக தூங்கிக் கொண்டிருந்த பெண்ணிடம் அதிகாலையில் கத்தி முனையில் தாலிச் செயினை பறித்துச் சென்ற மர்ம ஆசாமி.



14. ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே உடையநாதபுரத்தில் இருசக்கர வாகனத்தில் சென்ற பெண்ணின் கழுத்தில் இருந்த ஒன்பது சவரன் சங்கிலியை பறித்துச் சென்ற பைக் ஆசாமிகள்.

15. சென்னை மேற்கு மாம்பலத்தில் நிதி நிறுவன அதிபர் வீட்டு பூட்டை உடைத்து 15 சவரன் நகை 5 1/2 கிலோ வெள்ளி கொள்ளை.



16. ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் ஓய்வு பெற்ற ரயில்வே அதிகாரியின் வீட்டுப் பூட்டை உடைத்து 30 சவரன் நகை மற்றும் ஐந்து லட்சம் ரூபாய் கொள்ளை.

17. சேலத்தில் காவல் உதவி ஆணையர் அலுவலகம் மற்றும் அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் தொகுதி அலுவலகம் அருகே உள்ள பிரபல துணி கடையின் பூட்டை உடைத்து 4.5.லட்சம் பணம் கொள்ளை.

18. த.வெ.க ஆட்சியில் நீலகிரியில் சந்தி சிரிக்கும் சட்டம் - ஒழுங்கு. கோத்தகிரியில் வட மாநில தொழிலாளர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறில் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வெண்கலப் பதக்கம் வென்ற அபிநயா ராஜராஜனுக்கு சொந்த கிராமமான

தென்காசி மாவட்டம் - கல்லுத்தில் சிறப்பான வரவேற்பு!

முன்னாள் மாவட்டச் செயலாளர் பொ.சிவ பத்மநாதன் நேரில் வாழ்த்து!

தென்காசி, அக்.6 - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள்,கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகிய இருவரும் திராவிட மாடல் ஆட்சியின் போது விளையாட்டுக்கு கொடுத்து வந்த ஊக்கத்தின் காரணமாக அப்போது தங்கப் பதக்கங்கள் வென்ற அபிநயா ராஜராஜன் தற்போது ஜப்பானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெண்கலம் பதக்கம் வென்றும்,அதற்கு முன்பு உசுப் பேக்கிஸ்தான் நாட்டில் நடைபெற்ற தடகளப் போட்டியில் தங்கப் பதக்கங்கள் வென்றும் கொரியாவில் நடைபெற்ற தடகளப் போட்டியிலும் தங்கம் வென்று சாதனை படைத்த அபிநயா ராஜராஜன் அவர்கள் திறமையை பாராட்டி அவருடைய விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் மேற்கொண்டு அவருடைய திறமையை வளர்க்கிற வகையில் திராவிட மாடல் ஆட்சியின் போது கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் கழக இளைஞர் அணி செயலாளர், முன்னாள் துணை முதல்வரும் தற்போது எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களும் ஆண்டுக்கு 30 லட்சம் ரூபாய் வழங்கி விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவித்தார்கள்.

அந்த ஊக்கத்தின் காரணமாக தற்போது ஜப்பானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் அபிநயா ராஜராஜன் அவர்கள் வெண்கல பதக்கம் வென்று இந்தியாவிற்கு பெருமை சேர்த்து தமிழகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

திராவிட மாடல் ஆட்சியின் போது இரண்டு தங்கப்பதக்கம் வென்ற அபிநயா ராஜராஜன் தற்போது வெண்கலப் பதக்கமும் பெற்று நேற்று இரவு சொந்த கிராமமான கல்லுத்திற்கு வருகிறபோது ஆலங்குளம் பொதுமக்கள் சார்பிலும்,பெருந்தலைவர் காமராஜர் சிலை பாதுகாப்புக்குழு,ஆலங்குளம் வியாபாரிகள் சங்கம்,ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கம்,வேன் கார் ஓட்டுநர்கள் சங்கம் ஆலங்குளம் பத்திரிகையாளர்கள் சங்கம், லயன்ஸ் கிளப் ஆகியவைகளின் சார்பில் ஆலங்குளம் பெருந்தலைவர் காமராஜர் சிலை அருகில் அபிநயா ராஜராஜன் அவர்களுக்கு சோனா மகேஷ் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அதன் பின்னர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

அந்த வரவேற்பு நிகழ்ச்சியில் பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்களும் கலந்து கொண்டு வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

அதன் பின்னர் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவ பத்மநாதன் தலைமையில் சொந்த ஊரான கல்லுத்திற்கு வந்த அபிநயா ராஜராஜனுக்கு ஊர் எல்லையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆலங்குளம் முன்னாள் பேரூராட்சி துணைத் தலைவர் தங்கம் நகைக் கடை அதிபர் தங்க செல்வம் பொன்னாடை அணிவித்து தங்ககாயின் வழங்கி அபிநயா ராஜராஜனை இன்னும் பல போட்டிகளில் கலந்து கொண்டு தங்கம் வென்று நம் நாட்டிற்கும் நம் சொந்த மண்ணிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று வாழ்த்தினார். நிகழ்ச்சியில் மாவட்ட மாணவரணி முன்னாள் துணை அமைப்பாளர் தினேஷ் பாண்டியன், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் பொன் மோகன்ராஜ், மாவட்டப் பிரதிநிதி அன்பழகன்,அபிநயா அவர்களின் தந்தை ராஜராஜன் மோகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

ஈ.ராஜா எம்.எல்.ஏ. சகோதரர் ஈ.பாலமுருகன் மறைவு!

கழகத்தினர் நேரில் அஞ்சலி!

தென்காசி. அக். 6 - கழக மூத்த முன்னோடி ஈஸ்வரன் புதல்வரும் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் - வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா அவர்களின் அண்ணன் தென்காசி 31வது நகர் மன்ற உறுப்பினர் ஈ.பாலமுருகன் அவர்கள் 03.10.2026 சனிக்கிழமை அன்று தென்காசி சிந்தா மணியில் உள்ள இல்லத்தில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



அன்னாரின் இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் (04.10.2026 ஞாயிற்றுக் கிழமை) மதியம் 12 மணியளவில் நடைபெற்றது.

ஈ.பாலமுருகன் அவர்கள் மறைந்த செய்தி அறிந்ததும் கழக நிர்வாகிகள் அன்னாரது உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.